உ

பதிவு எண்—M 5720. வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

103

ஆசிரியர் : இளவழகனார்.

5-கிளை குருகுலம், மாம்பாக்கம்; விசய ஆவணி; 11—9—53 தனி.—50

குருகுலத்தின் குறிக்கோள் :

**பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது**

## பயன் தரும் பண்பு!

காரியப்பாட்டுக்கு ஏதுவானது அறமுறைமை! அதாவது ஒழுங்கு முறைமை! அதாவது நீதி முறைமை!

எல்லா நலன்களும் உலகத்தில் இத்தகைய அறமுறைமையினால் உண்டாகின்றன. முடிவில் இதனால்வீடுபேறும் உண்டாகின்றது.

காரியப்பாட்டுக்கும் நலங்களுக்கும் அறத்திறன் ஏதுவேயாயினும், சிறப்பாகக் காரியப்பாட்டுக்கு அறத்திறனும் நலங்களுக்குப்பண்பமைவும் காரணமாதும் என்பதையும் நாம் தெளிந்து கொள்ளலாம்.

அறம் என்பது நற்செய்கை; அதாவது நற்காரியங்கள்! காரிய விறுவிறுப்பில் அது சற்று மென்மையில்லதுபோல் வன்மை விளங்கத் தோற்றினாலும் உண்மையில் அறத்திறனினும் மென்மையானது வேறில்லை; மென்தகைய பெருமிதத்தது அது! அதற்குத்தான் ஒழுங்குற இயங்கும் கொழுநலன் உண்டு அதனால் அறம் என்னும் அந் நீதி முறைமை, 'நயம்' என்றும் நயம்பட வழங்கப்பெறும்.

ஆயினும், அதில் விழிப்பாகக் கருதவேண்டுவது ஒன்று உண்டு. காரிய விறுவிறுப்பிற் செல்லும்போது அதன் மென் திறத்தை வன்திறமாக்கிவிடுதல் ஆகாது. காரியம் என்பதற்காகச் சிலர் அறத்தை அதன் இயல்பினின்று மாற்றி மறமாக்கிவிடுகின்றனர்; அவ்வாறு மாறினால், அது நன்றி பயப்பதாகாது; அம் மென்மைப் பண்பின் தலைப்பிரியாத் தன்மையிலேயே அது பயன் ஈனும்!

நல்ல நோக்கத்தோடும் நல்ல தொடக்கத்தோடும் எதொன்றையும் தொடங்குதல் எளிது; ஆனால் உரிய நீதியாகிய நயத்தோடும் உரிய நலமாகிய நன்றியோடும் பயனும் பண்பும் ஒருங்கே வழுவாது தோன்றிவர அதனை நெடுக நடத்திக் கடமையாற்றுதல் அரிது!

மக்கள் இவ்வாறு இன்னுரை வாழ்க்கை வாழத் தெரிந்து கொண்டால், அவரை வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் என்று கூறலாமல்லவா?

*நயனீன்று நன்றி பயக்கும்*
*பயனீன்று பண்பின்*
*தலைப்பிரியாச் சொல்.*

பயன் ஈன்று— கருத்தால் பயன் தந்து, பண்பின் தலைப் பிரியாச் சொல்— மெல்லென உரைக்கும் இனிய தன்மையி லிருந்து வேறாகாத இன்சொல், நயன் ஈன்று நன்றி பயக்கும்— இம்மையில் அறமுறையான வாழ்க்கையினிமை தந்து மறுமையில் வீடுபேற்று நலனுந் தரும்.

நயன் — மெல்லிய அறமுறைமை. நன்றி— ஈண்டு வீடுபேற்றுநன்மை உணர்த்தி நின்றது.

சொற்கள் தரும் பயன் கருத்துகளேயாதலின், இவ்வாறு கூறினார்.

கருத்துகள் நல்லனவானாலும் சொற்களையும் இனிமையாகச் சொல்லுதல் மனமாசிலாதார்பண்பாதலின், இன்சொல்லைப் 'பண்பின் தலைப்பிரியாச் சொல்' என்றார். தலைப் பிரிதல், ஒரு சொல்.

சொற்கள் முதலில் நயன் தந்து தான் அதன் வாயிலாகப் பிற நன்மைகளெல்லாமும் பயக்குமென்பது விளங்க, நயனீன்று நன்றி பயக்கும் என்றாராதலின், இன்சொலின் உயிர்ப்பு அறமுறைமையேயாதல் நன்குணரப்படும். அதனால் அதனைப் 'பயன்' என்று பின்னும் விதந்தார்.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
5-ம் ஆண்டுக் கையொப்பம்
(3-10-52 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| மலர் | விசய, ஆவணி, 11-9-53 வெள்ளி | தளிர் |
|---|---|---|
| 5 | | 50 |


# திரைப் படம்

இயல் இசைகளை விட நடிப்பு மக்கள் உள்ளத்தில் ஆழ்ந்து பதிகின்றது. நடிப்பில் காணும் துயரங்களைக் கண்டு கண்ணீர் விட்டவர்களும் உண்டு. நாடகத்தில் காண்பதைப் போலவே தம் நடை, உடை, எண்ணங்களை எல்லாம் அமைத்துக் கொள்ள மக்கள் முயல்கின்றனர். உண்மை கடைப்பிடிப்பதில் மிக ஆழ்ந்த பற்றுக் கொள்ளும்படி காந்தியடிகளைச் செய்தது அரிச்சந்திர நாடகம் என்னும்போது அதன் ஆற்றலை என்னென்பது!

நடிப்புக் கலையை அனைவரும் இயல்பாகவும், எளிதாகவும் பெறச் செய்வது திரைப்படம். அறிவியல் வளர்ந்துள்ள இன்றைய நாகரிகத்தின் நன்மைகளுள் இது ஒன்று.

இதன் ஆற்றலையும் நன்மையையும் உணர்ந்து நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டுவது நம் கடமை. ஒரு படத்தைக் கண்ட உடனே நல்லதில் ஈடுபட வேண்டுமென்னும் ஊக்க உணர்ச்சியை மக்களிடையே உண்டாக்கலாம். நல்ல கதைகளைக் கொண்டு நாட்டன்பைப் பெருக்கலாம். மொழியன்பை உண்டாக்கலாம். இறையுணர்ச்சியைப் பதிய வைக்கலாம். ஒழுக்கத்தைச் சிறப்பிக்கலாம். நாட்டு வரலாற்றை அறிவிக்கலாம். உலகச் சான்றோர்களின் வாழ்க்கை வரலாறுகளைக் காட்டி உயர்ந்த குறிக்கோள்களைக் கொள்ளச் செய்யலாம். வெளிநாட்டுச் சிறப்புகளையும் மக்களையும்பற்றித் தெரிவிக்கலாம். வாழ்க்கைக் கோணலைத் தீர்க்க உதவும். சிறந்த நூல்களாகவே இப் படங்களை மாற்றி விடலாம்.

திரைப்படக் காட்சியை வெறும் பொழுது போக்காக மட்டும் கொள்வது தவறு. பொழுது போக்கு அதன் பல பயன்களுள் ஒன்று.

இன்று வெளிவரும் படங்கள் பெரும்பாலும் மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்னும் நோக்கம் உடையவையாகக் காணப்படவில்லை; அவர்களிடமிருந்து பெரும்பொருளைத் திரட்டுவதே நோக்கமாகக் காணப்படுகிறது.

நோக்கம் வேறாய் இருப்பதனால் தேவையற்ற, விரும்பத்தகாத காட்சிகள் பல காட்டப்படுகின்றன. தாழ்ந்த கருத்துக்கள் கவர்ச்சியான பண்களில் பாடப்படுகின்றன. இப் படங்கள் மக்களிடையேயுள்ள நல்ல கட்டுப்பாடுகள் சிலவற்றையும் கலைத்து வருகின்றன. புதிய ஒழுங்குகளை உண்டாக்குவதுமில்லை.

நாட்டு மக்கள் அனைவரும் திரைப்படங்களைக் காண்பதில்லை. பார்ப்பவர்களே மீண்டும் மீண்டும் பார்க்கின்றனர். குடியைப் போல இது சிலருக்கு வெறியையும் உண்டாக்கி இருக்கிறது. அடிக்கடி பார்ப்பதனால் இவர்கள் வாழ்க்கை முறையே மாறி வருகிறது. இந்த மாற்றம் நல்ல பாதையில் செல்லாததால் திரைப்படங்கள் நன்மையைவிடத் தீமையையே விளைக்கின்றன என்னலாம்.

நாடோறும் பல நூறாயிர மக்களோடு தொடர்பு கொள்ளும் இச் சிறந்த கருவி நல்ல பயனைத் தர வேண்டுமானால் படம் பிடிப்போர் நல்ல படங்களையே வெளியிட வேண்டும். மக்களும் தீய படங்களைக் காண்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். கதையாசிரியர்கள் தக்க சான்றோர்களாய் இருக்க வேண்டும். இவை இயலாவென்றால் ஆட்சியே படப்பிடிப்பை மேற்கொண்டு நல்ல முறையில் நடத்த வேண்டும்

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

கும் நடக்கையும்போலவே அதன் வளர்ச்சியும் ஆரம்பத்திலிருந்து தொடர்ந்து வந்துள்ளது.

நாகரிக வளர்ச்சியில், உயிர்களது தேவையின் படிப்படியான வளர்ச்சியும் சீர்திருத்தமும் தான் சமய வளர்ச்சிக்கான சக்தியாகும். சமயமும் நாகரீகமும் அடியொத்து முன்னேறுகின்றன. எனவேதான் எங்கெங்குத்தகைய நாகரிகமுள்ளதோ அங்கு ஒழுகிவரும் சமயமும் அதைப் பொருந்தியுள்ளது உண்மையாக அது நாகரிகத்தின் ஓர் அக உறுப்பு. பற்பல காலத்திலும், நாடுகளிலும் அது உயிர்களின் அவசியமான சக்தியை வெளிப்படுத்துவது.

# மொழித் துறை

## * ஈரடி இருநூறு *

நூலாசிரியர் — திரு. சே. கோதண்டபாணி பிள்ளை அவர்கள் B. A.
(ஆசிரியர் அவர்களின் உரையுடன்)

(முன் தொடர்ச்சி)

### அதிகாரம் 6.

### எழுத்தாண்மை

அஃதாவது பாட்டெழுதும் வன்மை கூறுதல்.

பாட்டென்பது கருத்து முதலியவற்றோடும் இசையோடுங் கூடியவிடத்தும் தெளிந்து எழுத்துவன்மை பெறுங்கால் நலம் நிறைவுறுதாகலின் இது கூறினார். அதிகார முறைமையும் இதனால் விளங்கும்.

**1. எழுத்தாண்மை போற்றி**
**எழுதுக, என்றும்**
**எழுத்தாளன் கண்ணே உலகு.**

எழுத்தாண்மையை வலிவுண்டாகக் காத்து எதனையும் எழுதுக; ஏனென்றால், உலக நடை எழுத்தாளனிடத்தே எப்போதும் உள்ளது.

எழுத்தை யாளுந்தன்மையை எழுத்தாண்மை என்றார். போற்றி எழுதுதலாவது, ஆற்றல் மிக்குப் பயன் விளைக்கும்படி கருத்தாகக் காத்தெழுதல். உலகு என்றது உலக நடையை. உள்ளது, அவாய்நிலையான் வந்தது எழுத்து, கருத்தை இனிதாகவும் எளிதாகவும் இயக்குங் கருவியாதலின், உலகு எழுத்தாளன் கண்ணதாயிற்று.

**2. எழுந்தியங்கும் ஞாலம்**
**இனிதறிந்து ஏற்ப**
**எழுதுதல் வல்லார்ப் பெறின்.**

உலக நடை நன்கறிந்து முறை பொருந்த எழுதுதல் வல்லாரைப் பெற்றால், உலகம், கிளர்ச்சி பெற்று இயக்கங் கொள்ளும்.

உலக நடை யறிதலாவது காலம், இடம், கருவி நிலை முதலியன அறிதல். நிரந்தினிது எழுதுதலை ஏற்ப எழுதுதலென்றார். 'பெறின்' என்றது, அதன் அருமை நோக்கி நின்றது. நெறியறியாமையாலும் துணையிலாமையாலும் மடியால் உறங்கிக் கிடந்த உலகம் இப்போது வாயிலுடையதாகி எழுந்தியங்குவதாயிற்றென்க. "விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்" என்றார் திருவள்ளுவர். உலகம், ஈண்டு உயிர்கண்மேல் நின்றது.

இவை இரண்டு பாட்டானும் எழுத்தால் விளையும் பொதுப் பயன் கூறினார்.

**3. வாளின் வலிதே**
**எழுதுங்கோல் வல்லவர்க்**
**காளின் அதுவே படை.**

எழுதவல்லவர்க்கு, அவர் எழுதுகின்றகோல் வாளைப் பார்க்கினும் வலிமையுடையது; நன்றாகக் கையாண்டால் அதுவே பலவகைப் படையுமாம்.

எழுதுங் கோல் 'பேனா' முதலிய கருவிகள். புறத்துறுப்பாகிய உடம்பொன்றையே தாக்கவல்லது வாள். ஆனால், எழுதுகோல் அகத்துறுப்பாகிய மனச்சான்று நினைவு அறிவு உணர்வு முதலியவற்றை எழுப்பி அவற்றை மறைத்து மயக்கிய காமம் வெகுளி மயக்கம் என்னும் அகக் குற்றங்களையும் அவற்றின் காரணங்களாகிய அறியாமை வினை மாயை என்னும் அடிப்படை அழுக்குகளையும் ஒருங்கு தாக்கி அதனால் மூறகூறிய புறத்துறுப்பாகிய உடம்பின் புலனியக்கங்களையும் ஒடுக்க வல்லதாகலின் அவ் வாளினும் வலிதென்றார். படையென்றது, நால்வகைப் படை முதலியவற்றை உணர்த்தும். வாள், தாக்குதல் ஒன்றிற்கே உரித்தாதலானும், படைகள் ஏனை ஆக்கம் காத்தல் முதலியவற்றிற்கும் உரித்தாதலானும் எழுதுகோலை ஆளும் முறையறிந்து ஆண்டால் அதுவே 'படை.' யுமாகும் என்றார். ஆளுதல், உலக நெறிமுறை நிறுத்தி நினைத்தவண்ணம் இயங்கவைத்தலின் மேற்று. ஏகாரம் அசைநிலை.

**4. கோடும் எழுந்தன்று**
**கூடொலியும் அன்றெனப**
**மூடியும் மூள்தீப் பொறி.**

எழுத்தென்பது அதன் வரியுமன்று; அவ் வரியோடு பொருந்தும் ஒலியுமன்று; ஆனால் அடக்கியுள் மூள்கின்ற தீப் பொறி

யென்று சொல்லுவர் உயர்ந்தோர்.

தீப் பொறி யென்ப என்று கூட்டுக. கோடு வரி வடிவையும்; ஒலி, ஒலிவடிவையும் உணர்த்தின. எழுத்துணர்வு, தான் என்ஞான்றும் மடிவுறாது தன்னை அடக்கும் பிறவற்றையுந் தனக்கு இரையாக்கிக் கொண்டு மேன்மேலும் வளர்ந்தோங்கி எழுதலானும், தன் ஒளியாலும் கனலாலும் அனைத்தையும் தூய்மை செய்தலோடு அத் தூய் நெறியில் அவற்றையும் இயங்கவைத்தலானும் அதனைத் 'தீப் பொறி' என்றார். எனவே, எழுத்தென்பது அதன் உணர்வை என்பது பெற்றாம்.

இவை இரண்டு பாட்டானும் எழுத்தின் இயல்பு தேற்றினார்.

5. எழுத்தின்றேல் ஏதேற்றம்?
என்னாங்கொல் வாழ்வு?
பழுத்தலோ இல்லை அறிவு.

எழுத்தாண்மையாளரின் எழுத்தில்லையாயின் மேன்மை ஏது? மக்கள் வாழ்வு என்னாகும்? அவர்கள் அறிவு முற்றுதல் என்பதோ இல்லை.

அறிவு முற்றி அதனால் வாழ்வு நிகழ்ந்து மேன்மை எய்தவேண்டுதலானும், ஆசிரியரின் எழுத்தின்றேல் அறிவு முற்றுதற்கு வாயிலில்லாமையானும் இவ்வாறு கூறினார். பழுத்தல், முற்றுதல்; 'மற்பழுத் தகன்ற மார்பத்து' (சிந். 435) என்றார் பிறரும். 'பழுத்தலோ இல்லை அறிவு', என்பது ஏனையவற்றிற்குக் காரணம். ஓகாரம் ஒழியிசை.

இதனால் எழுத்தால் விளையும் சிறப்புப் பயனும் வினை முறையும் கூறப்பட்டன.

6. கற்றேடப் புட்பறந் தற்றாகும் கற்றோரும்
சொற்றேட நில்லாக்கருத்து.

கல்வி வல்ல எழுத்தாளர் தமதெழுத்துக்குச் சொற்களைத் தேடிக்கொண்டிருக்க அந் நிலையில் நிலைபெறாது மறந்துவிடுங் கருத்து, கல்லைத் தேடிக் கொண்டிருக்க அதற்குள் பறவைகள் பறந்துவிடுந் தன்மைத்தாகும்.

இது, வினையுவமம். தேடப் பாத்தலாகிய தொழிலை மட்டும் நினைந்தது. இதனை "உற்ற துணருந் தெளிமருங் குளவே" (தொல். உவ. 20) என்பதனாற் கொள்க. கற்றோருமென்னும் எச்சவும்மை, புள்ளின் பொருட்டுக் கல் தேடுங் கல்லாதாரைத் தழீஇயது; சொல் தேடும் கற்றார் செயலும் கல்லார் செயலோடொப்பதாமென நகையாடிய படியென்க. திருந்திய உணர்வினால் எழுத்து இயற்கையாற்றலுடன் நடைபெறுக என்பது கருத்து.

'நில்லாக் கருத்' தென்றமையின் ஏமாற்றமும், புட்களைத் தாக்கி அகப்படுத்தும் பொருட்டுக் கற்றேடுஞ் செயலோடு உவமித்தமையின் அத்தகைய சொற்றேடும் எழுத்துக்களால் ஓரளவு தீமையும் உண்டென்பதுணர்த்தினார் தீமை, எண்ணந் திருந்தாமையின். அது மேற் செய்யுளிலும் உணரப்படும்.

7. எழுத்தாளன் ஆதல்
எளிதாம்; எழுதுமுன் எண்ணந்
திருந்துமெனின்

எழுத்தை எழுதுமுன் எழுதுவான் எண்ணம் திருந்துமெனின், அவன் எழுத்தாளனாதல் எளிதாகும்.

புலமையறிவு, கலையுணர்வு, அறப்பண்பு, புதுமைத்திரு, இயக்க நிலை முதலிய எழுத்தியல்புகள் பலவும் திருந்திய எண்ணத்திலிருந்தே எழுதலின், இவ்வாறு கூறினார். திருந்திய எண்ணமுடையோரே எழுத்தாளராவரென்பதும் இதனாற் பெறப்பட்டது.

8. ஆழ்ந்தும் தெளிந்தும்
அமர்ந்தோடும் நீரற்றே
ஆழ்ந்தறிந்து தேர்ந்தோர்
எழுத்து.

நுணுகிச் செல்லுமளவும் நுணுகிச்சென்று அடிப்படையிற் காணபபடும் உண்மைகளைக் கண்டறிந்து அயற்றின் இயல்புகளை நன்கு ஆராய்ந்து கொண்ட பேராசிரியரின் எழுத்து, ஆழங் கொண்டும் தெளிவடைந்தும் அடங்கிச் செல்லும் வெள்ளத்தின் தன்மைத்து.

தெளிதலாவது அழுக்கு நீங்கித் தன் அடிப்படையிற் கிடக்கும் பொருள்களையும் மேலிருந்து காண்பார்க்கு எளிதிற் புலப்படுத்துதல் மேற்பரப்பில் அமர்ந்து செல்லுதல் கோற்றினும் உள்ளே பெரிதும் விரைதலுண்மையின், 'ஓடும்' என்றார். 'நீர்' என்றமை, அதன் அடைமொழிகளால் வெள்ளம் என்றாயிற்று. எழுதுவோர் வேறு அவரெழுத்து வேறல்லாமையும், பெரும்பயனாகிய உலக நலமுடைமையும் உவமையாற் பெற்றாம்.

9. எழுத்துள் ஒளித்தல்
எளிதன் றெழுத்தே எழுதியோர்க்
காட்டி விடும்.

எழுத்தாளர் தாம் எழுதிய எழுத்தினுள் மறைந்து தம் எழுத்துமட்டும் புலப்படும்படி செய்தல் எளிதன்று எழுத்தே எழுதியோரையும் புலப்படுத்தி விடும்.

தம்மைப் புலப்படுத்தும் முயற்சி எழுதுவோர்க்கு வேண்டாதபடி எழுத்தே தனி நின்று காட்டி விடுமென்று அவரைப்

பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலை. தாம் திருந்தாது பிறர்க்கு மட்டும் அறிவுரை வகுப்பாரும், திருந்தி விளங்குந் தம்மைத் தம் எழுத்தாற் தெரிந்து உலகம் போற்றுதலில் இறங்காது அது பயனடைந்தாற் போதுமென விரும்புவோரும், நன்மையுந் தீமையுங் கலந்த தமது வாழ்க்கை வரலாற்றை மறைத்து, அதன் நன்மைப் பகுதியை மட்டும் வடித்துப் பிறர்க்குப் பயன் தரத்தக்கபடி எழுத்தாய் வழங்குவாரும், பொருத்தமேயாயினும் பிறர்க்குண்டாகுங் கருத்து வேறுபாடுகள் கருதித் தம் சிறப்புக் கொள்கைகளை மறைத்துப் பொதுமைக்குரிய முறையில் இரக்கத்தால் தம் எழுத்தைப் பண்படுத்தி உதவுவாருமென எழுத்தாளர் பல வகையினராதலின், எழுத்துள் ஒளிதலை ஆசிரியர் ஈண்டு விதந்தார். எளிதன்றென்றாயினும் இயலாதென்பதே பொருளாதல், 'காட்டி விடும்' என்னும் துணிவுப் பொருண்மொழியாற் கொள்ளப்படும். வாழ்க்கையும் எழுத்தும் வேறுகாமையின் இவ்வாறு கூறினாரென்பது.

இவை நான்கு பாட்டானும் எழுத்தை ஆளும் இயல் நெறி தெரிவிக்கப்பட்டது

10. அழிவுடன் ஆக்கமும்
ஆகுமா றோர்ந்தே இழிவின்றி
ஏற்க எழுத்து.

உலகுக்கு அழிவும் ஆக்கமும் எழுத்தினால் ஆகும் வகையை நன்குணர்ந்து அவ்விருவகையினும் இழிவில்லா வகையில் எழுத்தை ஏற்றுதவுக!

மாசுகளை அழித்து நன்மைகளை உருவாக்குதல் எழுத்தாற் கூடுதலின் எழுத்தை 'ஏற்க' எனவும், பொருளை அழித்தலும் தீமையை உருவாக்கலுங் கூடாமையின் 'இழிவின்றி ஏற்க' எனவுங் கூறினார். இதனால், எழுத்தாளர் தம் எழுத்தாற் கடனாற்றல் வேண்டுமென்பது புலப்படுத்தப்பட்டது.

# கீதை

(பா. வ.)

## 9. தலையாய அறிவும் தலையாய உண்மையும்

என்றும் அழிவற்ற உனக்கு, நான் இந்த விழுமிய உண்மையை, அறிவு கலந்த தெளிவைத் தெளிவிக்கின்றேன் இதைத் தெளிந்தபின், நீ துன்பத்தினின்றும் விடுபடுவாய்.

இதுவே தலையாய அறிவு; முடிந்த உண்மை; அரிய தூய்மை; தலை சிறந்த ஞானம்; இதுவே, செயலுக்கு எளியதும், நேர்மைக்கு உகந்ததும், அழியாததுமாகும்.

காணப்படும் இந்த உலகமெல்லாம், என்னால், என் புலனாகா இயல்பால் பரப்பப்பட்டுள்ளன. எல்லாப் பொருள்களும் என்னுள் வேரூன்றியுள்ளன. ஆனால் நான் அவைகளில் வேரூன்றவில்லை.

எங்கும் உலவிவரும் வன்மைமிக்க காற்று விசும்பை ஆதாரமாகக் கொண்டதைப்போல, எல்லாப் பொருள்களும், என்னை நிலைக்களனாகக் கொண்டு நிலைபெறுகின்றன.—இதை நீ தெளிவாயாக.

நான்தான் இந்த உலகக் கூட்டங்களின் தந்தையும், தந்தைக்குத் தந்தையும், தாயும், அவற்றை ஆதரிப்போனும், ஆவேன். நானே அவ்வுலகத்தார் அனைவரும் தெளியக்கூடிய தூய்மையான ஒன்றும். மேலான வாக்கின் சக்தியுமாகும்.

நானே வெப்பத்தை அளிக்கிறேன். அதைத் தவிர்த்து, மழையைப் பெய்விக்கிறேன். அழிவையும் அழியாத் தன்மையையும் கொடுப்பவனும் நானே; இருப்போனும், இல்லாதிருப்போனும் நானே, பார்த்தா!

நீ எதைச் செய்தாலும், எதை உட்கொண்டாலும், எதை அர்ப்பணித்தாலும் எதைக் கொடுத்தாலும், அல்லாததைச் செய்தாலும், எல்லாம் எனக்குச் செய்ததாகும்.

இவ்வண்ணமாக நீ நன்மையும் தீதுமான பயன்களைத் தரும் செயலின் (கன்மம்) தளையிலிருந்து விடுபடவேண்டும்; நீ, தன்முனைப்பறுக்கும் யோக வன்மையால் சமப் பண்பெய்தி கன்மத் தளையிலிருந்து விடுபடும்போது என்னை வந்தடைவாய்.

இவ்வண்ணமே தான் நான் எல்லா உயிர்களுக்கும். ஒருவரும் எனக்கு நண்பனோ அல்லாதவனோ ஆகான். என்னைப் பக்தியோடு வழிபடுபவர்கள் உண்மையாகவே என்னில் இருக்கிறார்கள். நான் அவர்களில் இருப்பதைப் போல.

எந்தக் கொடிய வினையாளனும் மாறுபாடற்ற உள்ளத்தால் என்னை வழிபட்டால், அவனும் திருந்தியவனாக எண்ணப்பட வேண்டும் ஏனெனில் அவன் திருந்திய உறுதி கொண்டதனால், விரைவாக, அவன் கடமையாளனாக மாறி நிலையான அமைதியை நாடிச் செல்கின்றான்; என்றும் அழியாத என் பக்தனாகிய உன்னைப்போலவே.

என்னில், உன் உள்ளத்தை நிறுத்தி, ஆன்மா சமத்தன்மை அடைந்து, விழுமிய வீடா என்னை எண்ணி என்னை வந்தடைவாயாக.

—பா. வரதராசன்

# குருகுலச் செய்தி

## குருகுலக் கூட்டத்தில்

முன்னரே அறிவித்திருந்தபடி 30-8-53 ஞாயிறன்று பிற்பகல் 3-30 மணிக்குச் சென்னைச் சிவனடியார் திருக்கூட்ட மண்டபத்தில் குருகுலத்தார் கூட்டம் நடைபெற்றது. மாதர்களும் ஆடவர்களுமாக ஏறத்தாழ 80 பேர் வந்திருந்தனர். கூட்டத்தின் நோக்கம் பற்றி முதலில் திரு. முத்துசாமி அவர்கள் பேசினார்கள். அடுத்துக் குருகுலத்தாரின் பொதுவான கடமைகள், முல்லைக் கொடி, பேட்டைச் சொற்பொழிவு, தொண்டர் படை அமைப்பு, குருகுல மாநாடு பற்றி எல்லாம் திரு. ஆடலரசு விளக்கிப் பேசினார்.

கூட்டத்துக்கு வந்திருந்தவரிற் பலர் தொண்டர் படையில் சேர்ந்தனர்; மாநாடு நடத்துவதற்கு நன்கொடை தருவதாகவும் ஒப்பம் தந்தனர்.

கீழ்க் காணும் முடிவுகள் பொது முறையில் கலந்து பேசிச் செய்யப் பட்டன.

1. புரட்டாசியில் குருகுல மாநாடு ஒன்றைச் சென்னையில் சிறப்பாக நடத்தி, குருகுலத்தார் அனைவரும் ஒருவர்க்கொருவர் அறிந்துகொள்ளுமாறும், குருகுலப் பணித் திட்டத்தைப் பற்றி நாட்டு மக்கள் அறிந்து கொள்ளுமாறும் செய்யவேண்டும்.

2. அம்மாநாட்டுச் செலவிற்குக் குருகுலத்தார் ஒவ்வொருவரும் குறைந்த அளவு நாலணா செலுத்தி, அதில் ஈடுபடவேண்டும்.

3. குருகுலத்தாரும் மற்ற அன்பர்களும் அதற்காக மனமுவந்து தரும் நன்கொடைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

4. குருகுலத் தொண்டர் குழுக் கூட்டம் ஒன்றை 9-9-53 ஞாயிறன்று காலை 6 மணிக்கு அனைவர்க்கும் அழைப்பு அனுப்பிக் கூட்டித் தொண்டர்களின் கடமை, உடை முதலியவற்றைப் பற்றித் திட்டம் செய்து கொள்ளவேண்டும்.

5 அக் கூட்டத்தில் குருகுலக் காணிக்கை தண்டல், முல்லைக் கொடிவளர்ச்சி முதலிய குருகுலப் பொதுப் பணிகளையும், பேட்டைச் சொற்பொழிவு, முல்லைக் கொடியின் எழுத்துத் தொண்டு, மாநாட்டுப் பணிகள் முதலிய சிறப்புப் பணிகளையும் தொண்டர்களுக்குப் பொறுப்பாகப் பகிர்ந்து கொடுக்கவேண்டும்.

இம் முடிவுகளுக்குப் பின் ஆசிரியர் குருகுலத்தை அமைக்கத் தாம் இதுகாறும் எடுத்துக் கொண்ட முயற்சிகளைச் சுருக்கமாகக் கூறி, அதனை எதிர் காலத்தில் தம் கருத்துப்படி நடத்தும் பொறுப்பைக் குருகுலத்தாரிடமே ஒப்படைக்கப் போவதாகவும், நிலங்களை ஒழுங்குபடுத்தி எல்லை அமைத்துத் திருக்குறளிற் காணப்படும் முறைப்படி அதிகார வாரியாக அவற்றைப் பிரித்து அங்கங்கே நடைபெற வேண்டிய செயல்களைப்பற்றிக் கருத்துத்தெரிவித்தல் தம் கடமையாக எண்ணியிருப்பதாகவும், மேற்கொண்டு அதனைத் தக்கபடி நடத்துவதைத் தம் கடமையாகக் கொள்ளுநர் குருகுல மாணவர்களுக்கு உரிய நிலங்கள் ஒதுக்கித் தரப் பெறும் என்றும், அதையும் அவ்வதிகாரச் செயல்களை ஒட்டி அங்கே அமையும் பொருள்களையும் பரம்பரை பரம்பரையாக ஆட்சி செய்யும் உரிமை அம் மாணவர்கட்கு உண்டென்றும், அதிகார ஏற்பாளர்கள் அனைவரும் அமைந்த சட்ட சபை போன்ற ஆட்சி மன்றத்திடமே குருகுலம் ஒப்படைக்கப்படும் என்றும், குருகுலத்தார்களில் வசதி நிறைந்தவர்களும், இனிச் சேர்பவர்களும் அதிகாரப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்களுக்குத் துணைவர்களாகச் சேர்ந்து செயலாற்றலாம் என்றும், இவ்வடிப்படைகள்மேல் தம் பேரில் உள்ள சொத்துக்களில் குடும்பத்துக்கு என்று ஒரு சிறு பகுதி போக மிகுதியை ஒரு விருப்ப ஆவணம் (Will) எழுதிக் குருகுலத்தின் பெயராலேயே பதிவு செய்து எவரும் விற்க மாற்ற உரிமையில்லாதபடி நிலை அமைக்கப் பெறும் என்றும், இவை பற்றிய இன்னும் சில விளக்கங்களையும், குருகுல மாநாட்டின் முதன்மை பற்றியும் பேசி, விருப்பமுள்ளவர்கள் முறைப்படி அதிகாரப் பொறுப்பை விரைந்து கொள்ளலாம் என்றும் தெரிவித்தார்கள்.

கடவுள் வாழ்த்தோடு கூட்டம் 5-45 மணிக்கு முடிந்தது.

—தமிழ்ச் சிறுவன்.

# சைவத் திருமுறைகள்

## 2

நட்பே, உன் கருத்தின் உட்பொருளை ஒருவாறு அறிவேன். அதற்காக வருந்தப் போவதில்லை. உன் உள்ளத்தின் வெளிப்படைக்கு மிக்க மகிழ்ச்சி.

"பழமை பிணத்திற் கொப்பானது. அதைப் புகழ்ந்து புகழ்ந்து இன்புறுவதால் ஆகும் பயனொன்றுமில்லை. அவை உயர்வு நவிற்சியே. இம் மயக்கத்திலிருந்து விடுபட்டு நிகழ் காலத்தில் இயங்க வேண்டு" மென்று குறித்திருந்தாய்.

ஐயத்தைப் போக்குவது எம் கடமை. விரிவாக எண்ணிப் பார்ப்போம். திருமுறைகளின் உயர்வு இவ்வளவு விழுமியதென்று முன் குறித்தது அதன் பயனைக் கருதியே அல்லாது வெறும் புகழுரைக்காகவோ அன்றிப் பற்றுக்காரணமாகவோ இல்லை.

இன்று. இவ்வுலகிலுள்ள பற்பல மொழிகளிலும் எண்ணிறந்த இலக்கியங்கள் பற்பல துறைகளில் எழுந்து மிளிர்கின்றன. சமயத் துறையிலும் இவ்வுலகின் தலைசிறந்த நாகரிக மொழிகளின் அரிய இலக்கியங்கள் பல உள்ளன.

நம் இழுமெனும் இன்னிசைத் தமிழிலும், சமயத் துறையில் சைவத் திருமுறைகளும் வைணவப் பிரபந்தங்களும் பரந்து உள்ளன. ஆனால் அனைத்துலக வரலாற்றில், சமயத்தைக் கற்க முயன்ற சான்றோர் நம் தண்டமிழ் மொழி மறைகளைக் கற்க வாய்ப்பே அற்றுப் போனது ஒரு பெருங் குறையாகும். நம் தாய் மொழியும், அதன் இலக்கியங்களும் குடத்திலிட்ட விளக்கென ஒளி குன்றியதே காரணமாகும். இப்பெருங் குறையே இன்று நம் சைவ சமய இலக்கியங்களை வெளியுலகோர் உணராததற்குக் காரணமெனலாம்.

சிறப்பாக நால்வர் பெருமக்களின் தேவார திருவாசகங்கள் மட்டும், இன்று இவ்வுலகில் மற்ற மொழிகளிலுள்ள சமய இலக்கியங்களேயன்றிப் பலதுறை இலக்கியங்களைப்போல் அகன்று பரவி உரியமுறையில் விளக்கம் கொண்டிருந்தால், சமயவுணர்வே அருகி வரும் இக்காலத்தை இவ்வுலகம் கண்டிருப்பது அருமை என்பது உண்மையாகும்!

உலகிலேயே, சரித்திரத்துக்கும் அதற்கப்பாற்பட்ட மானசீக காலத்துக்கும் முந்திய காலந் தொட்டு, நாகரிகத்தில் தலைசிறந்து வதிந்து வரும் ஓர் இனத்தின் அனுபவத்திலும் மேலான அனுபவப் பிழிவாக உள்ளனவல்லவோ இவ்வருள் நூல்கள்!

இப்போது இவ்வுண்மை மயக்கத்தைத் தருவதாயினும் இதை இவ்வுலகம் மிக அண்மையான எதிர்காலத்திலேயே, அறிவார்ந்த முறையிலும் தக்க சான்றுகளுடனும் தெளியவிருக்கின்றது! நிற்க.

நம் திருமுறை இலக்கியங்களின் அருமை பெருமைகளை ஆராய்ந்து காலத்துக் கொத்த முறையில் அவற்றை வாழ்வில் பயன் கொள்ளும் வகையைத் தெளியப் புகுமுன் அவை மானுட வாழ்வின் எந்தத் துறையின் தலைசிறந்த இலக்கியங்களாக உள்ளனவோ, அத் துறையைப் பற்றிச் சிறிது தெளியக் கடமைப்பட்டுள்ளோம்.

சமயம்! இன்று அறிவியலாளரின் ஏச்சுக்கு இலக்கான [illegible] உயிர்களின் நாகரிக வ[illegible]டன் அடியொத்து வளர்ந்து வரும் சமயம், ஏன் தன் சக்தியை இழக்க வேண்டும்?

உலகத்தின் தலைசிறந்த சமயங்களையெல்லாம் நுணுக்கிக் கற்று ஆய்ந்த அறிஞர்கள், சமயத்தின் தோற்றத்தைப் பற்றியும், வளர்ச்சியைப்பற்றியும் அரிய உண்மைகளை வெளியிட்டுள்ளார்கள்.

சமயம், ஆரம்பத்திலிருந்து சட்டத்தைப் போலவும், கலையைப் போலவும் வளர்ந்து வந்துள்ள ஒன்று. மனித சமுதாயத்தின் மற்றத் துறைகளைப் போலவே அதுவும், ஆரம்பத்திலிருந்து வளர்ந்து வந்துள்ளது. இன்றும், உயிர்களின் பொதுவான முன்னேற்றத்தை ஒட்டியே அதுவும் செல்கின்றது. சமூகத்தின் மற்றத் துறைகளின் ஒழுங்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
63, கிடங்குத்தெரு சென்னை 1.

# செல்வி

## அத்தியாயம் 5.

(முன் தொடர்ச்சி)

இப்பொழுது வருவான், வந்து கொண்டேயிருப்பான், வந்ததும் பணம் தந்து ஊருக்கு அழைத்துச் செல்வான். நாம் துன்பப்பட வேண்டியதில்லை. நமக்குள்ள கடனும் ஒழிந்து விடும் என்று சதா நேரமும் கந்தசாமி முதலி நினைத்துக்கொண்டிருந்தார்.

ஆம்! வந்தது. 31ம் தேதியும் வந்தது. வந்தான்; ஆம், யார்? அவன்தான் மார்வாரி. கடனைத் திரும்படி கேட்டான். விழித்தார்கள். தினகரன் இரண்டொரு நாளில் வந்துவிடுவான். பணம் தந்து விடுகிறோம் என்றார். ஆனால் விட்டானா? அதுதானில்லை 'குரங்கு பிடித்த பிடி' போல இப்போது பணம் உண்டா இல்லையா? என்றான். ஆம், இந்தச் சொல் நாராசம் போல விழுந்தது கந்தசாமிக்கு. எமனிடமிருந்து வந்தது போன்றது அச் சொல் நாகம்மாளுக்கு, செல்வியோ ஓவெனக் கதறியே விட்டாள். கலங்கினர்; கலக்கம் சாமானியமாக இருந்ததா? இல்லை. சொல்ல முடியாது. அவ்வளவு விசாரப்பட்டனர். எல்லாரும் கதறினார்கள். ஆம், மறு விநாடி வீடு ஏலம் போடப்பட்டது. சென்றது கூற்றுவனிடம் நாகம்மாளின் உயிர். அழுதனர், தெருவிலே நின்றனர் மகளும் தங்கையுமாக. யாது செய்வார்கள்? அரசன் இல்லையா? எண்ணினார்கள்; அரசன் அவன் கடமையைச் செய்துகொண்டிருக்கிறான் என்பது அவர்களுக்கு அப்போது தெரியுமா? தெரியாது புலம்பினர்; அவன் காதில் கேட்கவில்லையா என்று. ஆனால் அவன் கேட்டுக்கொண்டுதான் இருந்தான். தீவினை யாரை விடும்! ஊழ்வலி இலேசானதா? புண்ணியமும் பாவமும் தவிர உயிருடன் யாது வருகின்றது? யாதும் இல்லை. ஆம் அவர்கள் இருவரின் நிலை? பாதையிலே சென்றனர்; சென்றனர் இருவரும் உயிரற்ற பிணம்போல. எழுதவே துன்பப்படுகிறது நெஞ்சம். அவர்கள் நிலையைக் கூறவோ, எழுதவோ அவத்தைப்படுகின்றது. அப்படியென்றால் அவர்களின் நிலை? நிலை நிலையானதாக இருக்கின்றதா? இல்லை. இன்று வருவானோ? நாளைக்கே வருவானோ? கூற்றுவன். என்று வருவான்? அவன் முன்னடியாகத் தெரிவித்துத்தான் வருகின்றானா? இல்லையே அவர்கள் சென்றுகொண்டிருந்தனர் ஓர் பாதையிலே.

அன்று திங்கட்கிழமை. காலையில் எழுந்து வழக்கம்போல காலைக்கடனை முடித்துக்கொண்டு பாங்குக்குச் சென்றார் தினகரன்' சரியாக மணி 2 ஆயிற்று. அப்போதுதான் செக்கை மாற்றிக் கொண்டு திரும்ப ஆரம்பித்தார் தினகரன்.

அன்றைய தினமே வீடு வாங்கப் பட்டது. ஒரு நல்ல நாள் குறித்து அந்த நாளிலே அந்த வீட்டிற்குப் போகலாம் என முடிவு கட்டினார்கள். மறு நாள் பொழுது விடிந்தது. அண்ணன் முதலானவர்களை அழைத்துவரக் கிளம்பினார். தன் வீட்டு மாடியிலிருந்து கீழே இறங்கும் பொழுது கால் தவறி விட்டது, தினகரனுக்கு உருண்டார் மாடிப் படிகளிலே கீழே விழுந்தார். ஐயோ எனப் பதறினாள் சுசீலா. சின்னதம்பிக்கும், டாக்டருக்கும் போன் செய்தார். பின்பு அவரை ஒரு படுக்கையின் மேல் படுக்க வைத்தாள். வேலைக்காரி வெந்நீர் போட்டுக் கொண்டுவந்து கொடுத்தாள்.

டாக்டர் வந்தார். உடம்பைப் பார்த்தார். மிக்க பலவீனமாக உள்ளது என்றார். இஞ்செக்ஷன் ஒன்று கொடுத்தார். படுக்கையிலிருந்து அசையக்கூடாதென்றார். சென்றார்.

சின்னதம்பி இவையெல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தான். கண்ணீர் விட்டான். சாக்கிரதையாக இறங்கக் கூடாதா மாமா என்றான். துக்கம் தொண்டையை அடைத்தது.

"முகநக நட்பது நட்பன்று,
நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு"

என்றல்லவோ வள்ளுவர் வரையறுத்துள்ளார். அது போன்றே சின்னத்தம்பியும் அகத்துள் மிக்க அன்பு உடையவனாகப் பழகி வந்துள்ளான். நட்பு என்பது இவ்வாறு அன்றோ இருக்க வேண்டும்! நெஞ்சில் பகை, வெளியில் உறவாடல்; இதுவா நட்பு. இது வல்லவே நட்பு. "வஞ்சனைகள் செய்வாரோடிணங்க வேண்டாம்" என்று அல்லவோ உலக நீதி கூறுகின்றது. "உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" என்றன்றோ திருவருட்பா எடுத்துக் காட்டுகின்றது. ஆனால் சின்னத்தம்பி அகத்திலும் வெளியிலும் மிக்க அன்புடையவன்; அப்படிப்பட்ட நட்பை அல்லவா தினகரன் பெற்றிருந்தான். சின்னத் தம்பியின் வீடு தினகரன் வீட்டிலிருந்து ஏறக்குறைய ½ மைலுக்கு அப்பால் இருந்தது.

பதிந்து அச்சிட்டு வெளியிடுவோர்; இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்)